# பிரபந்தசாரம்

ஸ்ரீ:
ஸ்ரீமங்நிகமாந்த மஹாதேசிகாய நம:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமங்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

18. பிரபந்தசாரம்

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்கள் ஆய்ந்தடைவே*
அன்புடனே அம்புவியோர் அனைவரும் ஈடேறவென்று*
நாரணனுர் தாள்களிலே நாலாயிரம் தமிழால்*
நண்ணியுரை செய்தவற்றை நாடிவகை தொகைசெய்தாய்*
பூரணமா ஞானியர்சேர் பொங்குபுகழ்த் தூப்புல்வரும்*
புனிதனென்றும் பிள்ளையென்றும் புவியோர்புகழ் வேங்கடவா*
தாரணியோர் இங்கு உகக்க சாற்றிய நற் ப்ரபந்தசாரம்*
தனையுரைத்து வாழும் மனம் தந்தருளாய் என்றனக்கே.

ஆதிமறை ஓதிமகிழ் ஹயக்கிரீவர் தம்மருளால்*
அன்புடனே தூப்புல் நகர் அவதரித்து இங்குவந்து*
வாதியரை வென்றுவந்து வன்புவிமேல் எதிராசர்*
வாழ்வுறு நல் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து*
நீதிநெறி தவறுமல் நிறுத்தியிடும் வேங்கடவா*
நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளையெல்லாம் உணர்ந்து*
சாதுசனம் வாழவென்று சாற்றியநற் ப்ரபந்தசாரம்*
தனையுரைத்து வாழும் மனம் தந்தருளாய் என்றனக்கே.

18.1:##
ஆசார்யவந்தனம்

ஆழ்வார்கள் அவதரித்த நாளூர் திங்கள்*
அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த*
வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்*
வகையான தொகையிலக்கம் மற்றும் எல்லாம்*
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும்*
விரித்துரைக்கும் கருத்துடனே மிக்கோர் தங்கள்*
நீள்பாதம் நிரந்தரமும் தொழுது வாழ்த்தும்*
நேசமுடன் அடியேன் தன் நெஞ்சு தானே.

18.2: பொய்கையாழ்வார்:

அருள்மிகுத்த ஒருவடிவாய்க் கச்சி தன்னில்*
ஐப்பசி மாதத் திருவோணத்து நாளில்*
பொருள்மிகுத்த மறைவிளங்கப் புவியோர் உய்யப்*
பொய்கைதனில் வந்துதித்த புனிதா! முன்னுள்*
இருளதனில் தண்கோவலிடை கழிச்சென்று*
இருவருடன் நிற்கவும் மாலிடை நெருக்க*
திருவிளக்காமென வையந் தகளி நூரும்*
செழும்பொருளை எனக்கருள் செய்திருந்த நீயே.


Prepared by R.venkat rmvenkat@yahoo.com

பிரபந்தசாரம்

18.3: பூதத்தாழ்வார்:

கடன்மல்லை காவலனே! பூத வேந்தே!*
காசினிமேல் ஐப்பசியில் அவிட்ட நாள்வந்து*
இடர்க்கடியுந் தண்கோவலிடை கழிச்சென்று*
இணையில்லா மூவருமாய் இசைந்தே நிற்க*
நடுவில் அவர் ஒருவரும் என்றறியா வண்ணம்*
நள்ளிருளில் மால் நெருக்க நந்தா ஞானச்-
சுடர்விளக்கேற்றிய* அன்பே தகளியான-
தொடை நூறும்* எனக்கருள் செய்துலங்க நீயே.

18.4: பேயாழ்வார்:

மாமயிலைப் பதியதனில் துலா மாதத்தில்*
வரும் சதயத்து அவதரித்துக் கோவலூரில்*
தூமுனிவர் இருவருடன் துலங்க நின்று*
துன்னிய பேரிருள் நீங்கச் சோதி தோன்ற*
சேமமுடன் நெடுமாலைக் காணப் புக்குத்*
திருக்கண்டேன் எனவுரைத்த தேவே!* உன்தன்-
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்*
பழவடியேன் எனக்கருள்செய் பரம நீயே.

18.5: திருமழிசையாழ்வார்:

தைமகத்தில் வருமழிசைப் பரனே!* மற்றைச்-
சமயங்கள் பல தெரிந்து* மாயோனல்லால்-
தெய்வம் மற்றில்லையென உரைத்த* வேதச்-
செழும்பொருள் நான்முகன் தொண்ணூற்ரூறு பாட்டும்*
மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடல்*
விளங்கிய நூற்றிருபதும் தப்பாமல்* மெய்யே-
வையகத்தில் மறவாமல் உரைத்து வாழும்-
வகை* அடியேனுக்கருள் செய் மகிழ்ந்து நீயே.

18.6:## நம்மாழ்வார்:

முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்*
முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்*
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி*
மறவாதபடி எண்பத்தேழு பாட்டும்*
பின்னுரைத்ததோர் திருவாய் மொழி* எப்போதும்-
பிழையற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும்*
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்*
எழிற்குருகை வருமாறு! இரங்கு நீயே.

18.7: மதுரகவி ஆழ்வார்:

தேறிய மாஞானமுடன் திருக்கோளூரில்*
சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி*
ஆறிய நல்லன்புடனே குருகூர் நம்பிக்கு*
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து*
மாறனையல்லால் என்றும் மறந்தும்* தேவு-
மற்றறியேன் என்னும் மதுர கவியே!* நீமுன்-
கூறிய கண்ணிநுண்சிறுத்தாம் பதனில் பாட்டு*
குலவு பதினொன்றும் எனக்கு உதவு நீயே.

## பிரபந்தசாரம்

18.8: குலசேகராழ்வார்:

பொன்புரையும் வேல் குலசேகரனே* மாசிப்–
புனர்ப்பூசத்து எழில்வஞ்சிக் களத்தில் தோன்றி*
அன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயில்*
அனைத்துலகின் பெருவாழ்வும் அடியார் தங்கள்*
இன்பமிகு பெருங்குழுவுங் காண* மண்மேல்–
இருளிரிய வென்றெடுத்த இசையில் சொன்ன*
நன்பொருள்சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும்*
நன்ருக எனக்கருள் செய் நல்கி நீயே.

18.9: பெரியாழ்வார்:

பேரணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில்*
பெருஞ்சோதி தனில்தோன்றும் பெருமானே* முன்–
சீரணிந்த பாண்டியன் தன் நெஞ்சு தன்னில்*
துயக்கற மால் பரத்துவத்தை திறமாச் செப்பி*
வாரணமேல் மதுரைவலம் வரவே* வானில்–
மால் கருட வாகனனுய்த் தோன்ற வாழ்த்தும்*
ஏரணி பல்லாண்டுமுதற் பாட்டு* நானூற்று–
எழுபத்து ஒன்றிரண்டும் எனக்கு உதவு நீயே.

18.10:##
கோதைப்பிராட்டி:

வேயர்ப்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப் பூரம்*
மேன்மேலும் மிகவிளங்க விட்டு சித்தன்*
தூய திருமகளாய் வந்து அரங்கனுர்க்குத்*
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே*
நேயமுடன் திருப்பவைப் பாட்டு ஆறைந்தும்*
நீயுரைத்த தையொரு திங்கள் பாமாலை*
ஆயபுகழ் நூற்று நாற்பத்து மூன்றும்*
அன்புடனே அடியேனுக்கு அருள்செய் நீயே.

18.11: தொண்டரடிப்பொடியாழ்வார்:

மன்னுமதிள் திருமண்டங் குடிதான் வாழ*
மார்கழிமாத கேட்டை நாளில் வந்து*
துன்னுபுகழ்த் தொண்டரடிப் பொடியே* நீ முன்–
துழாய்மாலைப் பணியடிமை செய்து நாளும்*
தென்னரங்க மணவாளற் கன்பு மிக்குச்–
செப்பிய* நல் திருமாலை நாற்பத்தைந்தும்*
பன்னியநல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்*
பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே.

18.12: திருப்பாணாழ்வார்:

உலகறிய மலிபுகழ்க் கார்த்திகை மாதத்தில்*
உரோகிணிநாள் உறந்தைவளம் பதியில் தோன்றி*
தலமளந்த தென்னரங்கர் பால்* உலோக–
சாரங்க மாமுனி தோள்தனிலே வந்து*
பலமறையின் பொருளால் பாண் பெருமாளே* நீ–
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த*
சொல் அமலனுதிபிரான் பத்து பாட்டும்*
சோராமல் எனக்கருள்செய் துலங்க நீயே.

பிரபந்தசாரம்

18.13:##
திருமங்கை ஆழ்வார்:

அறிவுதரும் பெரியதிருமொழி தப்பாமல்*
ஆயிரத்தோடு எண்பத்து நாலு பாட்டும்*
குறியதொரு தாண்டகம் நாலைந்து* ஆறைந்து–
குலாநெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை ஒன்றும்*
சிறியமடல் பாட்டு முப்பத்து எட்டிரண்டும்*
சீர்ப்பெரிய மடல் தனில் பாட்டு எழுபத்தெட்டும்*
இறையவனே கார்த்திகையில் கார்த்திகை நாள்*
எழிற்குறையல் வரும்கலியா இரங்கு நீயே.

18.14:##
ஸ்ரீபாஷ்யகாரர்: (திருவரங்கத்தமுதனார்)

தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில்*
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றிக்*
காசினிமேல் வாதியரை வென்று* அரங்கர்–
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா* முன்–
பூசுரர்க்கோன் திருவரங்கத் தமுதனார்* உன்–
பொன்னடி மேல் அந்தாதி யாகப் போற்றிப்–
பேசிய* நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்*
பிழையறவே யெனக்கருள்செய் பேணி நீயே.

18.15:
எண்ணின் முதலாழ்வார்கள் மூன்று நூறும்*
எழில் மழிசைப் பிரான் இருநூற்றொரு பத்தாறும்*
உண்மைமிகு மாறன்மறை ஆயிரத்தோடு–
உற்ற* இரு நூற்றுத் தொண்ணூறும் ஆறும்*
வண்மையுடை மதுரகவி பத்து மொன்றும்*
வஞ்சியர்க்கோன் நூற்றைந்தும்* பட்ட நாதன்–
பண்ணிய நானூற்று எழுபத்து மூன்றும்*
பார்க்கோதை நூற்றெழு பத்து மூன்றே.

18.16:
பத்தரடிப் பொடிபாடல் ஐம்பத்தைந்தும்*
பாணர்புகழ் பத்துடனே பரகாலஞ்சொல்*
அத்தனுயர் வேங்கடமாற்கு ஆயிரத்தோடு–
ஆன* இரு நூற்றேர் ஐம்பத்து மூன்றும்*
முத்திதரும் எதிராசர் பொன்னடிக்கே*
மொழிந்த அமுதர் பாடல் நூறுமெட்டும்*
எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த–
இவை* நாலாயிரமும் எங்கள் வாழ்வே.

18.17:##
வையகமெண் பொய்கை பூதம் பேயாழ்வார்*
மழிசையர்க்கோன் மகிழ்மாறன் மதுர கவி*
பொய்யில்புகழ்க் கோழியர்க்கோன் விட்டு சித்தன்*
பூங்கோதை தொண்டரடிப் பொடி பாணாழ்வார்*
ஐயனருட் கலியன் எதிராசர் தம்மோடு*
ஆறிருவர் ஓரொருவர் அவர்தாம் செய்த*
துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின்–
தொகை* நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே.

18.18:##
அந்தமிலா ஆரணங்கள் நாலாய் நின்ற*
அதன்கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து*
செந்தமிழால் அருள்செய்த வகை தொகையும்*
சிந்தாமல் உலகங்கள் வாழவென்று*
சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும்*
வேதாந்த குருமொழிந்த ப்ரபந்த சாரம்*
சிந்தையினுல் அனுதினமும் சிந்திப் போர்க்குச்*
சேமமதாம் திருமால் தன் கருணை யாலே.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

அடிவரவு: ஆழ்வார், அருள், கடல், மாமயிலை,
தைம்மகத்தில், முன்னுரைத்த, தேறியமா, பொன்புரையும்,
பேரணிந்த, வேயர்புகழ், மன்னுமதிள், உலகறிய,
அறிவுதரும், தேசமெலாம், எண்ணின், பத்தரடிப்பொடி,
வையகமெண், அந்தமிலா, அகாரத்திருவகை.